செ.வெ எண்: 120 நாள்: 17.03.2017

**மாவட்ட ஆட்சியர் அவர்களின் பத்திரிக்கை செய்தி**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் தமிழ்நாடு அரசு, வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருப்புக்குழி, உத்திரமேரூர், அய்யன்பேட்டை, செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம், திருப்போரூர், மதுராந்தகம், சோத்துப்பாக்கம், எல்.எண்டத்தூர், சிட்லபாக்கம் ஆகிய 10 கால்நடை மருந்தகங்களில் உலர் தீவன கிடங்குகளை நிறுவியுள்ளது. வறட்சி நிலை சீராகும்வரை ஒரு கால்நடைக்கு தினம் 3 கிலோ வீதம் அதிகபட்சம் 5 கால்நடைகளுக்கு ஒரு வாரத்திற்கு 105 கிலோ வரை விவசாயி ஒருவருக்கு உலர் தீவனம் மானிய விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ.2/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கால்நடை வளர்ப்போர் தங்கள் குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டையுடன் உலர் தீவனக்கிடங்கு அமைந்துள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரை அணுகி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மண்டல இணை இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத் துறை,
காஞ்சிபுரம்

மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்

2/2

14/3/17

13/3/17